Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சென்னை சபாக்களில் தமிழ் நாடகங்கள் (2001-2022)

**இ.குமணன்**
**முனைவர் பட்ட ஆய்வாளர் – தமிழ் துறை மொழியியல் புலம்**
**வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்**
anbesivam24@gmail.com

5

**ஆய்வுச்சுருக்கம் :**

இருபத்தோராம் நூற்றாண்டினில் இன்று நிலவி வரக்கூடிய தமிழ் மேடை நாடகங்களின் தொடக்க வடிவம், பம்மல் சம்மந்த முதலியார் அவர்களால் உருவாக்கப்பட்டது எனக் கொள்ளலாம். 1891ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் சம்மந்த முதலியார் தொடங்கிய குழு சுகுண விலாச சபா. அதற்கு முன்பு வரை பெரும்பாலும் பாடல்களாகவும், 10 மணி நேரமாகவும் இருந்த நாடக அமைப்பை, முழுவதும் உரையாடல்களாகவும் நான்கிலிருந்து ஐந்து மணி நேரமாகவும் மாற்றியவர் பம்மல் சம்மந்த முதலியார்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிகளில் உருவான நாடகக் குழுக்கள் எல்லாம் சபாக்கள் என்றே அழைக்கப்பெற்றன. பின்னாளில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சபா என்ற பெயர் புதுக்காரணம் பெறத் தொடங்கியது. 1896ஆம் ஆண்டு, கலை, கலாச்சாரத்தைப் போற்றி பேணும் பொருட்டு, சங்கீத ஆர்வலர் மணி கிருபாச்சாரியர் என்ற கலை ஆர்வலர் ‘சங்கீத வித்வத் சபை’ என்ற ஒரு சபையைத் தொடங்கினார். இச்சபாவில் கர்நாடக சங்கீதம், ஹரிகதை, நாடகம், நாட்டியம், ஆன்மீக உபன்யாசகங்கள் நடத்தப்பட்டன. இச்சபா 1900இல் ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபா என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டது. இன்று 124 ஆண்டுகளை கடந்து இயங்கிக் கொண்டிருக்கும் இச்சபாவே முதன் முதலில் தோன்றிய சபா எனக் குறிக்கலாம்.

1950க்கு பிறகு சென்னையிலும் பிற நகரங்களிலும் உருவாகிய பல சபாக்களின் வரிசையில் 1975ஆம் ஆண்டு உருவான கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் சபாவின் செயல்பாடுகள் தமிழ் மேடை நாடகங்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன.

கோடை நாடக விழா என்ற பெயரில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் ஒரு நாடகப் போட்டியை நடத்துகின்றது. போட்டியில் வெல்பவர்களுக்கு பரிசுகள் வழங்கி அவர்களின் நாடக ஆர்வத்தை வளர்த்து வருகின்றது கார்த்திக் பைன் ஆர்ட்ஸ். இதன் மூலம் தமிழ் மேடை நாடகம் உயிர்ப்புடன் திகழ கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் சபா பெரிதும் தொண்டாற்றி வருகின்றது என்ற உண்மையை நம்மால் உணர முடிகின்றது.

**திறவுச்சொற்கள் :**

கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் சபா, நாடகங்களின் கருப்பொருள், நாடகங்களின் வசன நடை, நாடகங்களின் நாடகமாக்கம், கோடை நாடக விழாவின் பரிசுகள்.

**முன்னுரை :**

இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட பெருங்கலை கூத்தும் நாடகமும், என்ற பின்னணியுடையது நம் நீண்ட நெடிய வரலாறு கொண்ட பண்பாடு. தொல்காப்பியம், சிலப்பதிகாரம், வள்ளுவம் என நாடகக்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

குறிப்புகள் பரவியுள்ளதை நாமறிவோம். அத்தகைய பெருமை கொண்ட தமிழ் நாடகங்கள் கால மாற்றங்களுக்கு ஏற்ப எழுச்சியையும், வீழ்ச்சியையும், மாறி மாறி சந்தித்தே வந்திருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ச்சிப்பெறத் தொடங்கிய சபாக்களும், அவை நடத்திய நாடகங்களும், ஆய்விற்குரிய ஒரு தலைப்பாக அமையத்தக்கன. இதனைக் கருத்தில் கொண்டு இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் 22 ஆண்டுகள் சென்னை சபா தமிழ் நாடகங்கள் என்ற பார்வையில் இக்கட்டுரை அமைகின்றது. 1950க்கு பிறகு சென்னையிலும் பிற நகரங்களிலும் உருவாகிய சபாக்கள், கலை ஆர்வலர்களை கட்டணம் மூலம் உறுப்பினர்களாக்கி அவர்களுக்கு, இயல், இசை, நாடகம் என நிகழ்ச்சிகளை வழங்கி கலைச்சேவைப் புரியத்தொடங்கின. அவ்வரிசையில் 1975 ஆம் ஆண்டு உருவான கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் என்ற சபாவின் செயல்பாடுகள் தமிழ் மேடை நாடகங்களின் வளர்ச்சிக்கு எவ்வகையில் உதவி வருகின்றன என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் :**

கோடை நாடக விழா என்ற பெயரில், ஆண்டு தோறும் ஏப்ரல் மே மாதங்களில் தொடர்ந்து 12 போட்டி நாடகங்களை நடத்தி, சிறந்த நாடகம், கலைஞர்கள், எழுத்தாளர்கள் என அனைத்துப் பிரிவினருக்கும் பரிசுகள் வழங்கி நாடக ஆர்வத்தை வளர்த்து வரும் அரிய பணியினை செய்து வருகின்றது கார்த்திக் பைன் ஆர்ட்ஸ்.மத்திய அரசு அலுவலகத்தில் பணி புரிந்து வந்த திரு. ராஜகோபால் தன் நண்பர்களுடன் சேர்ந்து 1951 ஆம் ஆண்டு மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் என்ற சபாவைத் தொடங்கி நடத்தி வந்தார். பின்னர் 1975 ஆம் ஆண்டு கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் என்ற சபாவைத் தொடங்கினார். சென்னை நகரின் முக்கிய சபாக்களில் ஒன்றாக மாறியது கார்த்திக் பைன் ஆர்ட்ஸ். திரு ராஜகோபால் அவர்களின் தொலைநோக்கு பார்வையில் உருவானது தான் கோடை நாடக விழா.

‘90களிலிருந்து 2000வரை ஆண்டொன்றுக்கு 9 நாடகங்கள் என 99 நாடகங்கள் அரங்கேறியுள்ளன’ என்கிறார் கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் சபாவின் தற்போது செயலாளராக விளங்கும் திரு.டி.எஸ்.ராஜகோபால் (1).

**கோடை நாடக விழா :**

1990 முதல் நடைப்பெற்று வரும் கோடை நாடக விழாப் போட்டியில் கலந்துக் கொள்ள முக்கிய விதி, போட்டிக்கான நாடகங்கள் வேறு படைப்புகளின் தழுவலாக இல்லாமல் சொந்த கற்பனையில் உருவானதாக இருக்க வேண்டும் என்பதே. 2001 முதல் 2022 வரை, கோவிட் தொற்று காரணமாக இரண்டாண்டுகள் விழா நடைபெறாததையும் கணக்கில் கொண்டால் இருபது ஆண்டுகளில் புதிதாக அரங்கேறி உள்ள நாடகங்களின் எண்ணிக்கை 215(2) நாடகங்களை அரங்கேற்றி உள்ள குழுக்களின் எண்ணிக்கை 52(2) நாடகங்களை எழுதியுள்ள எழுத்தாளர்களின் எண்ணிக்கை 57(2) இந்த எண்ணிக்கை தமிழ் மேடை நாடக உலகிற்கு கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் வழங்கியுள்ள கொடை என்றே குறிக்கலாம். ஆய்விற்கான காலக்கட்ட நாடகங்களின் கருப்பொருள், வசன நடை, நாடகமாக்கம் குறித்த செய்திகளை அறிவோம்.

**நாடகங்களின் கருப்பொருள் :**

ஆய்வுக் காலக்கட்டத்தில் அரங்கேறியுள்ள 215 நாடகங்களின் கருப்பொருளை மையமாக வைத்து நாடகக் கருத்தியலை அணுகுவோம்.

60 விழுக்காடு மையக்கருத்தாக அமையப்பெற்ற, நடுத்தரக் குடும்ப உறவுகளை மையமாக வைத்து

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அமைந்த நாடகங்கள், எத்தகைய கருத்துக்களை முன் வைத்தன என காண்போம். 'சொல்லத்தான் நினைக்கிறேன்' அப்பா அம்மா பாசத்தை உணர்ச்சிகரமாக பேசிய நாடகம், வாரிசுகளுடன் மோதும் முதிய தலைமுறையின் உணர்வுகளை பேசிய நாடகம் 'நீங்களே சொல்லுங்க', சிறு குழந்தையாய் தத்துக்கொடுக்கப்பட்ட பெண் வளர்ந்த பிறகு தாயாரை சந்திக்கும் நாடகம் 'கண்மணியே பேசு'(3), என இவ்வாறு நடுத்தரக் குடும்பத்தின் நிகழ்வுகளையே மையக்கருத்தாக கொண்டே நாடகங்கள் அமைந்துள்ளன.

பிற கருத்துக்களை மையமாக வைத்து அமைக்கப்பட்ட 40 விழுக்காடு பேசிய மற்ற நாடகங்களின் கருப்பொருள் அறிவோம். ஜோதிடத்தை அடிப்படையாக கொண்ட 'ஏடென்ன எழுத்தென்ன'(3), திரு JR ஆள்வார் எலும்புக் கூடு' என்ற பெயரில் மர்ம நாடகம்(3). முதியோர் இல்லத்தில் நடைபெறும் ஒரு சம்பவத்தை அடிப்படையாக கொண்டு அமைந்த நாடகம் 'மனிதக்காட்சி சாலை'(3), தேசப்பற்றினை அடிப்படையாக கொண்டு' தலைமுறைகள்'(3) பக்தி நாடகங்கள் வரிசையில் மகாப்பெரியவாள் அருள் பேசும் 'தெய்வத்தின் குரல்'(3) போன்ற நாடகங்கள் மேடையேறியுள்ளன. நாடகம் பற்றிய நாடகமாக 'நாடகமே உலகம்', 'நாகம்மாள் பாடசாலை'(3) ஆகிய நாடகங்கள் அமைந்துள்ளன. நீதிமன்றங்களை பின்புலமாக வைத்து 'சதி விதி மதி' (3) முழு அரசியல் நாடகமாக 'கருப்பு ஆடுகள் '(3) மாற்றுத்திறனாளியை மையமாக வைத்து 'என்ன கவி பாடினாலும்', விளையாட்டை அடிப்படையாக வைத்து' சதுரங்கபார்வை', மீனவ சமுதாயத்தை பின்புலமாக வைத்து 'தரை மேல் பிறக்க வைத்தான்' (3) மிக அரிதாக, மிக துணிவாக ஓரினச்சேர்க்கையை அடிப்படையாக வைத்து 'கதிர்வேலன் கணக்கு'(3) போன்ற நாடகங்களும் அரங்கேறியுள்ளன.

<u>நாடகங்களின் வசன நடை :</u>

சென்னை சபா தமிழ் நாடகங்களின் வசனங்களை ஆய்வு கண் கொண்டு நோக்கும் போது ஓர் உண்மை புலப்படுகின்றது. பெரும்பாலும் நாடக வசனங்களின் மொழி நடை பிராமண பேச்சு வழக்கிலேயே அமைந்துள்ளது. நாடகத்தின் கதாபாத்திரங்கள் பிராமணர்கள்,பேச்சு பிராமண மொழி நடை என்பதே பிரதானமாக அமைந்துள்ளது. வித்தியாசமான கதை களம் அமையும் போது மட்டும் மொழி நடை மாறுபடுகின்றது. ஏன் இந்த நிலை, நாடகம் என்பது எல்லோருக்கும் பொதுவானது தானே, எல்லா மொழி நடையும் பின்பற்றப்படலாமே, என்ற கேள்விக்கு, 'இதுவே எங்களுக்கு எளிதாக வருகின்றது, பார்வையாளர்களிலும் பெரும்பாலும் அவர்களே இருப்பதால் இதுவே நடைமுறையாகி விட்டது'(4) என்றே பதில் வந்தது. சென்னை சபா நாடகங்களின் வசன மொழி நடை பற்றி குறிக்கும் போது இக்கருத்தை நினைவில் கொள்ள வேண்டியது மிக அவசியமாகிறது.

**<u>நாடகங்களின் நாடகமாக்கம் :</u>**

ஆண்டு தோறும் ஏப்ரல் மே மாதங்களில் நடைபெறும் கோடைநாடக விழாவில் பத்து முதல் பன்னிரெண்டு நாடகங்கள் அரங்கேறுகின்றன. நாடகமாக்கத்தில் முக்கிய பங்காக அமைவது பின்னணி இசை. கோடை நாடக விழா நாடகங்களில் நாடகத்திற்கென்றே சிறப்பாக இசையமைக்கப்பட்ட நாடகங்களும் இடம்பெற்றுள்ளன. 'நாடக கதையைக் கேட்டு அதன் கருப்பொருளை உள்வாங்கி இசையமைப்பது நாடகத்திற்கு சிறப்பு சேர்க்கும் ஒரு செயலாக அமைந்துள்ளது'(5).

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

'மாறுபட்ட கதை களங்கள் அமையும் போது அரங்க அமைப்பு திட்டமிடுதலிருந்து இசை, ஒப்பனை, ஒலி, ஒளி என அனைத்துப்பிரிவிலும் ஒரு இயக்குனரின் பங்கு தேவைப்படுகின்றது'(6). ஒப்பனை, ஒலி,ஒளி என அனைத்துப் பின்னணி தொழில் நுட்பங்களும் நாடக கருப்பொருளுக்கு ஏற்ப செயல்படுகின்றன.

**கோடை நாடக விழாவின் பரிசுகள் :**

கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் கோடை நாடக விழா ஆண்டு தோறும் ஏப்ரல் மே மாதங்களில் நடைபெறும். அனுமதி இலவசம். ஆண்டு தோறும் பார்வையாளர்கள் வருகை ஆயிரம் தாண்டியே அமைகின்றது. இந்நாடகப்போட்டியின் பரிசளிப்பு விழா ஆண்டு தோறும் ஜூன் மாதம் முதல் தேதி நடைபெறுகின்றது. இவ்விழாவில் போட்டியில் பங்குபெற்ற நாடகங்களிலிருந்து, சிறந்த நடிகர், நடிகை, குணசித்திர நடிகர், நடிகை, நகைச்சுவை நடிகர், கதாசிரியர், வசனகர்த்தா, இயக்குனர், நாடகக்குழு, நகைச்சுவை நாடகம், அரங்கமைப்பு ஆகிய பிரிவுகளின் கீழ் நாடக

உலக ஜாம்பவான்களின் பெயர்களில் புரவலர்கள் வழங்கியுள்ள சுழற்கோப்பைகளும், பரிசுகளும்(7) அளிக்கப்படுகின்றன. இவை தாண்டி சிறந்த நாடக விமர்சனங்களுக்கும் ரசிகர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன(7)

**முடிவுரை:**

நாம் ஒவ்வொரு விநாடியும் பயன்படுத்தும் கைப்பேசியே ஒரு குறு அரங்கமாகி நம்மை மகிழ்விக்கும் இக்காலக்கட்டத்தில், இரு நூற்றாண்டு பின்னணிக் கொண்ட ஒரு நாடகக்கலை இன்றளவும் சிதைந்து விடாமல், சென்னைப்போன்ற பெரு நகரங்களில் தொடர்ந்து நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது என்றால் அதற்கு கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் சபாவின் கோடை நாடக விழா எனும் முயற்சி பெரும் துணை என்பதை நம்மால் உறுதியாய் சொல்லமுடிகிறது.

**துணை நின்ற நூற்கள் / நேர்காணல்கள் :**


1. டி எஸ் ராஜகோபால் - கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் சபா செயலாளர் சென்னையில் 06.03.2024இல் ஆய்வாளருடன் உரையாடிய போது கூறிய கருத்து
2. கோடை நாடக விழா அழைப்பிதழ் தகவல்கள்.
3. கோடை நாடக விழா அழைப்பிதழ்களில் அச்சடிக்கப்பட்டுள்ள கதைச்சுருக்கத்தின் அடிப்படையில்.
4. S L நாணு - நாடக எழுத்தாளர் - 17.02.2024இல் நேர்காணலில் தெரிவித்த கருத்து.
5. தக்ஷிண் - இசையமைப்பாளர் - 16.02.2024இல் நேர்காணலில் தெரிவித்தது.
6. கார்த்திக் கௌரிசங்கர் - இயக்குனர் - 15.12.2023இல் நேர்காணலில் தெரிவித்தது..
7. கோடை நாடக விழா பரிசளிப்பு விழா அழைப்பிதழ் தகவல்கள்.